## 6. கைத்தொழில்

ஏற்றுமதியை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்களின் முனைப்பான வளர்ச்சியைப் பிரதிபலித்து 2000ஆம் ஆண்டில் கைத்தொழில்துறை 11 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது. 1999இல் இத்துறையின் வளர்ச்சி 4.5 சதவீதமாக இருந்தது.

- 2000இல் ஆடைகள், புடவைகள், இறப்பரை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திப் பொருட்கள், தேயிலை பதனிடல் கைத்தொழில்கள், பொறிகள், பிளாத்திக்கு, இரசாயனப் பொருட்கள், செயற்படு கரியம், வைரக்கற்கள் பதனிடல் என்பன உயர் வளர்ச்சியினைப் பதிவுசெய்தன.
- ஐக்கிய அமெரிக்க நாடுகள், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளினது பொருளாதாரங்களில் ஏற்பட்ட ஆரோக்கியமான வளர்ச்சியுடன் கிழக்காசிய நாடுகளின் விரைந்த மீட்சியும் இணைந்து இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களுக்கான கேள்வியினைத் தூண்டின.
- உள்நாட்டுச் சந்தையை அடிப்படையாகக் கொண்ட கைத்தொழில்கள், மென்பானம், பால் உற்பத்திகள், பதனிடப்பட்ட இறைச்சி, பிஸ்கட், வெறியக் குடிவகை, பெற்றோலியம், நறுமணப் பொருட்கள், இரசாயனம், சவர்க்காரமும் தூய்மையாக்கிகளும், கட்டடப் பொருட்கள், வளமாக்கிகள், பேருந்து உடற்பாகங்கள் மற்றும் படகுகளை உருவமைத்தல் என்பனவற்றின் உயர் வெளியீட்டுடன் சேர்ந்து கலப்பு செயலாற்றத்தினைக் காட்டின.
- சீமெந்து, பியர், சீனி, மின்கலங்கள், உலோக உற்பத்திப் பொருட்கள் என்பனவற்றின் வெளியீடு 2000இல் வீழ்ச்சியடைந்தது.
- கைத்தொழில் துறையின் உற்பத்திச் செலவு அதிகரித்தமைக்கு ஐக்கிய அமெரிக்க நாடுகளுக்கும், ஐரோப்பிய ஒன்றிய நாடுகளுக்குமான அதிகரித்த கப்பற் சரக்குக் கட்டணம் மற்றும் குறிப்பாக ஆண்டின் பிற்பகுதியில் அதிகரித்த வட்டிவீதங்கள், இறக்குமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களின் செலவு, எரிபொருள், மின்வலு, துறைமுகக் கட்டணங்கள் என்பனவே காரணமாகும்.

கைத்தொழில் வெளியீட்டின் வளர்ச்சி %




**வரைபடம் 6.1**

- ▲ கைத்தொழில் துறையின் வெளியீடு 2001இல் 7.7 சதவீதத்தினால் வளர்ச்சியடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது. இம்மிதமான வளர்ச்சி வீதத்திற்கு 2000ஆம் ஆண்டில் காணப்பட்ட உயர்ந்ததளம் மற்றும் வழமையான பேணலுக்காக 2001இன் முற்பகுதியில் பெற்றோலிய தூய்மி முடப்பட்டமை என்பன முக்கிய காரணங்களாக இருந்தன.

## துணைத் துறைகளின் செயலாற்றம்

### புடவைகள், ஆடைகள், தோல் உற்பத்திப் பொருட்கள்

- ▲ இத்துணைத்துறை ஆடைகள் மற்றும் புடவை உற்பத்திகளின் உயர்ந்த வளர்ச்சியைப் பிரதிபலிக்கின்ற விதத்தில் 15.4 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.
- ▲ 2000இல் ஆடைத் தொழில் துறையின் வெளியீடு 17 சதவீதத்தினால் வளர்ச்சியுற்றது. ஆடைகளின் பன்னாட்டு விலைகள் 2000ஆம் ஆண்டில் 5.3 சதவீதத்தினால் அதிகரித்தன.
- ▲ பாரிய ஆடைத் தயாரிப்பாளர்களினால் ஐக்கிய அமெரிக்காவிற்கு இவ்வாண்டில் உல்லாச ஆடைகள் மற்றும் மாரிகாலத்திற்கான ஆடைகளுக்கான அவர்களது சந்தை இருப்பினை வலுப்படுத்தக் கூடியதாயிருந்தது.
- ▲ ஐரோப்பிய ஒன்றிய சந்தைக்கான அனுமதிப் பங்கிற்குட்படாத ஏற்றுமதிகளிலேற்பட்ட அதிகரிப்பிற்கு மிகப் பிந்திய வடிவமைப்புக்கள் உரிய நேரத்தில் விநியோகிக்கப்பட்டமை, உற்பத்திப் பொருட்களின் தரத்துடன் ஒப்பிடுகையில் போட்டிகரமான விலைகள், ஐரோப்பிய ஒன்றிய பிராந்தியத்தினுள் பாதுகாக்கப்பட்ட புதிய சந்தைகளுக்குள் உட்பிரவேசித்தமை என்பன காரணமாக அமைந்தன.
- ▲ மேம்பட்ட தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு பன்னாட்டுச் சந்தைகளில் வாடிக்கையாளர் தளத்தினை விரிவுபடுத்துவ தற்கும் மேலைத்தேய சந்தைகளில் காணப்படும் மிகப்பிந்திய வடிவமைப்புப் போக்குகளை அறிந்து தயாரிப்பாளர்கள் அதிகரித்த கேள்வியுடைய வடிவமைப்புக்களை உற்பத்தி செய்வதற்கும் உதவியது.

முக்கிய கைத்தொழில் துணைத் துறைகளின் செயலாற்றம்




வரைபடம் 6.2

▲ பாரிய ஆடைத் தயாரிப்பாளர்கள் வடிவமைப்பு மற்றும் தரப்படுத்தல் மையப்படுத்தப்பட்ட வெட்டுப்பொறிகள் தையல் பூ வேலைகள் பொறி மூலம் துணிகளைச் சுருக்குதல் மடித்தல் மற்றும் திரை அச்சிடல் என்பனவற்றிற்கான தனியியக்க முறையினை அறிமுகப்படுத்தினர்.

## உணவு, குடிபானம் மற்றும் புகையிலை

▲ இத் துணைத்துறை, மென்பானங்கள், பால் உற்பத்திகள், கோதுமை மா பதனிடல், பிஸ்கட், பதனிடப்பட்ட இறைச்சி, வெறியக் குடிவகை, சொக்க லேற்றுக்கள், தெங்கு உற்பத்திகள் ஆகியவற்றின் உயர்ந்த வளர்ச்சியைப் பிரதிபலித்து 5.5 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

▲ இப்பொருட்களுக்கான உள்நாட்டுக் கேள்வி அதிகரித்தமைக்கு நகர குடித் தொகையினரிடையே இப்பொருட்கள் பிரபல்யமடைந்து வருகின்றமை, செயற் றிறன் வாய்ந்த விளம்பரம் மற்றும் பிராந்திய வர்த்தக முகவராண்மை களின் உதவியுடனான வினைத்திறன் மிக்க விநியோக வழிமுறைகள் என்பன காரணமாக அமைந்தன.

▲ முக்கிய உற்பத்தியாளர்கள் பல புதிய பொருட்களை அறிமுகஞ்செய்ததுடன் வாடிக்கையாளர் தேவைகளை மதிப் பிடுவதற்காக தொடர்ச்சியாக ஆராய்ச்சிகளை மேற்கொள்வதனூடாக பொருட்களின் தரத்தினை மேம்படுத் தினர்.

▲ மென்பானத் தொழில்துறை முன்னைய ஆண்டின் 7.5 சதவீதம் கொண்ட வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2000இல் 11.2 சதவீத வளர்ச்சியினைப் பதிவு செய்து முனைப்பாக மீட்சியடைந்தது.

## இரசாயனங்கள், இறப்பர் மற்றும் பிளாத்திக்கு

▲ இத் துணைத்துறை, இறப்பர் உற்பத்தி கள், வளமாக்கி, பிளாத்திக்கு, சவர்க் காரம், அழகுசாதனப் பொருட்கள், தூய்மையாக்கிகள், களைகொல்லிகள், கிருமிநாசினிகள், பிவிசி உற்பத்திகள், ஆயுர்வேத மருந்துப் பொருட்கள், இர சாயனங்கள், தீந்தைகள் என்பனவற்றின் அதிகரித்த வெளியீட்டு மட்டங்களை பிரதிபலித்து 13.6 சதவீதத்தினால் வளர்ச்சியடைந்தது.

ஒப்புதல் வழங்கப்பட்ட ஒப்பந்தம் செய்யப்பட்ட முதலீட்டுச் சபை தொழில் முயற்சிகள்




வரைபடம் 6.3

- கிழக்காசிய நாடுகளின் நாணயங்களின் பெறுமதி உயர்வடைந்தமை மற்றும் மேற்கத்தைய சந்தைகளில் அதிகரித்து வரும் கேள்வி என்பன காரணமாக இறப்பரை அடிப்படையாகக் கொண்ட தொழில்துறை அதன் பன்னாட்டுப் போட்டித்தன்மையை மீண்டும் பெற்றுக்கொண்டது.
- வீண்விரயத்தையும் கழிவுகளையும் மிகக் குறைந்த மட்டத்தில் வைத்திருப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட முறைமைகள், கழிவுப் பொருட்களை மீள் பதனிட்டு மீளப் பயன்படுத்தல், உள்நாட்டு மூலப்பொருட்களின் விலைகளிலேற்பட்ட குறைப்பு என்பன இறப்பர் சார்ந்த தொழில்துறைகளின் உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கு உதவின.
- இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தூய்மி தடங்கலின்றித் தொழிற்பட்டதன் காரணமாக பெற்றோலிய உற்பத்தி மிகக் கூடுதலாக அதிகரித்தது.
- குறைந்த விலைகளில் சிறிய அளவிலான பொதிகளின் அறிமுகப்படுத்தலுடனான சந்தைப்பாகுபடுத்தலானது பற்பசை, சம்பூ, மணம் கமழ் பொருட் கள் என்பனவற்றிற்கான கேள்வியினை குறிப்பாக, குறைந்த வருமானம் கொண்ட வாடிக்கையாளரிடையே அதிகரிக்கச் செய்தது.
- குறிப்பாக தேயிலை மற்றும் நெற்றுறைகளின் அதிகரித்த பாவனையை ஈடுசெய்யும் விதத்தில் வளமாக்கி உற்பத்தி கணிசமாக அதிகரித்தது.
- ஐக்கிய அமெரிக்காவிலிருந்து பெறப்பட்ட அதிகரித்த ஏற்றுமதிக் கட்டளைகள், மேம்பட்ட தெங்கு உற்பத்தி, மேம்பட்ட தேங்காய்த் துருவல் தொழில் துறையிலிருந்து தேங்காய்ச் சிரட்டைகளின் வழங்கல் அதிகரித்தமை என்பன காரணமாக செயற்படு கரியத் தொழில்துறை கணிசமாக மீட்சியடைந்தது.

## கைத்தொழில் முதலீடு

- முதலீட்டுச்சபை 2000ஆம் ஆண்டில் 329 செயற்றிட்டங்களுக்கு ஒப்புதலளித்தது. 201 செயற்றிட்டங்கள் தொடர்பில் உடன்படிக்கைகளில் கைச்சாத்திட்டது.

ஒப்புதல் வழங்கப்பட்ட ஒப்பந்தம் செய்யப்பட்ட முதலீட்டுச் சபை முதலீடுகள்




வரைபடம் 6.4

▲ 2000ஆம் ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட செயற்றிட்டங்களின் முதலீட்டுக் கடப்பாடு ரூ.88 பில்லியனாகும்.

▲ 2000ஆம் ஆண்டில் ஒப்புதலளிக்கப்பட்ட முதலீடுகளின் வெளிநாட்டுக்கூறு ரூ.23 பில்லியன் அல்லது ஒப்புதலளிக்கப்பட்ட மொத்த முதலீட்டில் 27 சதவீதமாகும்.

▲ இச் செயற்றிட்டங்கள் 59,375 பேருக்கு தொழில் வாய்ப்பினை உருவாக்கும் என மதிப்பிடப்படுகின்றது.

▲ 2000ஆம் ஆண்டில் ஒப்பந்தம் செய்யப்பட்ட செயற்றிட்டங்களின் முதலீட்டுக் கடப்பாடு ரூ.45 பில்லியனாகும்.

▲ ஒப்பந்தம் செய்யப்பட்ட முதலீடுகளின் வெளிநாட்டுக்கூறு ரூ.17 பில்லியன் அல்லது ஒப்பந்தம் செய்யப்பட்ட மொத்த முதலீடுகளில் 37 சதவீதமாகும்.

▲ ஒப்பந்தம் செய்யப்பட்ட இச் செயற்றிட்டங்கள் 43,267 பேருக்கு தொழில் வாய்ப்பினை உருவாக்குமென மதிப்பிடப்படுகின்றது.

▲ சீத்தவாக்க கைத்தொழில் பூங்காவின் நிருமாணம் ரூ.3.6 பில்லியன் செலவில் 1999இல் நிறைவுசெய்யப்பட்டது.

▲ இப்பூங்கா தரம்மிக்க 10 தொழிற்சாலைகள் உள்ளிட்ட 71 தொழிற்சாலைகளை நிறுவுவதற்கான அமைவிடங்களுக்கு நவீன வசதிகளை வழங்குகின்றது. 2000ஆம் ஆண்டில இறுதியளவில் 64 தொழிற்சாலை அமைவிடங்கள் முதலீட்டாளர்களிடையே பகிர்ந்தளிக் கப்பட்டதுடன் 22 தொழிற்சாலைகள் வர்த்தக ரீதியாக தொழிற்பட்டு கிட்டத்தட்ட 6,000 பேருக்கு நேரடித் தொழில் வாய்ப்பினை வழங்கியிருந்தன.

▲ 2000ஆம் ஆண்டில் இறுதியில் 22 கைத்தொழிற் பேட்டைகள்/பூங்காக்கள் தொழிற் பாட்டிலிருந்தன.

▲ அண்மிய எதிர்காலத்தில் கிட்டத்தட்ட 23,000 பேருக்கு நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்புக்களை வழங்கக்கூடிய எதிர்பார்ப்புடன் எட்டு காணித்துண்டுகள் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

▲ 2000ஆம் ஆண்டில் இறுதியில் ஐம்பது

## கைத்தொழில் உற்பத்தியின் உள்ளடக்கம்




வரைபடம் 6.5

## உயர் தொழில்நுட்ப நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் ஒப்புதல் வழங்கப்பட்ட செயற்றிட்டங்கள்




வரைபடம் 6.6

ஆடைத் தொழிற்சாலை நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 67 ஆடைத் தொழிற்சாலைகளுக்கு ஒப்புதலளிக்கப் பட்டிருந்தது. இவற்றுள் 50 தொழிற்சாலைகள் வர்த்தக ரீதியான செயற்பாட்டிலிருந்த வேளையில் 9 கைத்தொழிற்சாலை களின் நிருமாண வேலைகள் நடைபெற்றுக் கொண் டிருந்தன. இத் தொழிற் சாலைகள் ஆடை ஏற்றுமதித் துறையின் உற்பத்தி இயலளவை அதிகரித்தன.

## கைத்தொழிற் கொள்கை

- 1997இலிருந்து அரசினால் பின்பற்றப் படும் தனியார் துறையினால் வழிநடத்தப்படும் ஏற்றுமதி சார்ந்த கைத் தொழிற் கொள்கை கடந்த இரு தசாப்தங்களில் கைத்தொழில் துறையினைக் கணிசமானளவிற்கு பன் முகப்படுத்தலை ஊக்குவித்து உள் ளூர்ச்சந்தை சார்ந்த கைத்தொழில் களில் தங்கியிருத்தலை குறைவடையச் செய்துள்ளது.
- ஏற்றுமதி சார்ந்த கைத்தொழில்களின் மேம்படுத்தலைத் தொடர்ந்து கைத்தொழில் உற்பத்திக்குப் பங் களிப்புச் செய்யும் பாரிய துறையாக ஆடை மற்றும் புடவைத்துறை விளங்கி, உணவு குடிபானம், புகையிலை, இரசாயனம், பெற்றோலிய உற்பத்தி கள் ஆகிய கைத்தொழில் துணைத் துறைகளின் பங்கினை கணிசமாக குறைவடையச் செய்தது.
- 2000ஆம் ஆண்டில் ஐரோப்பிய ஒன்றிய நாடு களில் அனுமதிப் பங்கு கட்டுப்பாடு களின்றி ஆடை மற்றும் புடவை வர்த்தகத்தில் ஈடுபடுவதற் கான உடன்படிக்கையிலும், இலங்கைக் கும் இந்தியாவிற்கும் இடையில் கட்டுப் பாடுகளற்ற வர்த்தகத்தில் ஈடுபடு வதற்கான உடன்படிக்கையிலும் கைச் சாத் திட்டதன் மூலம் வெளிநாட்டு வர்த்தகத்தை ஊக்குவிப்பதற்கான முன் முயற்சியினை அரசு மேற் கொண்டது.
- இலங்கை உற்பத்தியாளர்கள் பிராந்திய மற்றும் உலகளாவிய போட்டித் தன்மையினை எதிர்கொள்ளும் வகை யில் கைத்தொழில் உபாயத்தினை மீள மைக்கும் நோக்கில் யப்பானிய பன் னாட்டு ஒத்துழைப்பு முகவராண்மை மற்றும் ஐக்கிய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்தி அமைப்பு என்பனவற்றின் ஒத்துழைப்புடன் கைத்தொழில் மயமாக்கல் மற்றும் முதலீட்டு ஊக்கு விப்பிற்கான பாரிய திட்ட மொன்றினை அரசு 2000இல் உருவாக்கியது.
- முதலீட்டு ஊக்குவிப்புக்களை ஒழுங்கு முறைப்படுத்துவதற்கான தேவை 2000 ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகளில் வலியுறுத்தப் பட்டது.
- 1996ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப் பட்ட மேம்பட்ட தொழில்நுட்ப ஊக்கு விப்புக்கள் திட்டம் 2000இல் மேலும் ஈராண்டுகளுக்கு நீடிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் ஒப்புதலளிக்கப்பட்ட முதலீடுகள் 2000ஆம் ஆண்டு இறுதியில் ரூ.42 பில்லியனாகக் காணப்பட்டன.